தமிழ்ச்சோலை - பிரான்சு
Tamoulcholai-France

# திருக்குறள் திறன் போட்டி 2026

## வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

# தமிழ்ச்சோலை மட்டப் போட்டி நெறிமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும்.

போட்டியாளர்கள் குறளின் பொருளறிந்து மனனம் செய்வது போட்டிக்கான திறனை மேம்படுத்தும்.

## போட்டிக்கான புள்ளிகள்

1. மனனம்
2. ஒலிப்பு
3. பலுக்கல்
4. உணர்வு
5. நிலை

என்பனவற்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

**எல்லாப்பிரிவுகளிலும் அதிகாரம் கூறப்பட வேண்டும்.**

பள்ளியின் அனைத்து மாணவர்களும் திருக்குறள் திறன் போட்டியில் பங்கு கொள்வது அவர்களின் தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும். பள்ளி மட்டத்தில் பங்கு கொள்ளும் மாணவர்களை ஊக்குவிப்பது அந்தந்த பள்ளியின் கடமையாகும்.

திருக்குறள் திறன் போட்டி 2026
வள்ளுவர் ஆண்டு - 2057

# திணைக்கள மட்டப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் இரண்டு குறள்களைக் கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

முதற்சொல் எழுதப்பட்டிருக்கும் திருவுளச்சீட்டின் மூலம் இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும் கூறவேண்டும்.

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவுகள் – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொற்களைக் கொண்டு** குறள்கள் கேட்கப்படும்.
- எல்லாப் பிரிவிலும் அதிகாரம் கூறப்படல் வேண்டும்.

### குறள் ஒப்புவிப்பின்போது

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.



# இறுதிப் போட்டி நெறிமுறைகள்

## மழலையர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

## சிறுவர் பிரிவு

- திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும். (திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)

---

## கீழ்ப்பிரிவு – நடுவண் பிரிவுகள் – மேற்பிரிவுகள் – உயர் பிரிவு – மீயுயர் பிரிவு

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **இடைச்சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.
- **மேற்பிரிவிலிருந்து** ...

1. அதிகாரத்தைக் குறிப்பிட்டு **அதிகார எண்** கேட்கப்படும்.
2. குறிப்பிட்ட குறளுக்குரிய **அதிகாரத்தைக் கூறுமாறு** கேட்கப்படும்.
3. குறள்களின் **பொருள்களுக்குரிய** விளக்கம் தொடர்பான **வினாக்கள்** வினவப்படும்.

---

**அனைத்துப் பிரிவுகளிலும்**

1. **மனனம்**
2. **ஒலிப்பு**
3. **பலுக்கல்**
4. **உணர்வு**
5. **நிலை**

**என்பன கவனிக்கப்படும்.**

.



## மீமேற்பிரிவு

**அகவை எல்லை : 01.09.2008 - 31.08.2010**

### 1, அதிகாரம் 46 : சிற்றினஞ் சேராமை

மனநலம் நன்குடையார் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து

பொருள் : சான்றோர் இயல்பாகவே நல்ல மனம் உடையவராயினும், நல்ல இனத்தவரோடு சேர்ந்திருப்பதே அவர்களுக்கு பாதுகாப்பாகும்.

### 2, அதிகாரம் 95 : மருந்து

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

பொருள் : உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்பது நீண்டநாள் வாழ்வதற்கு வழியாகும்.

### 3, அதிகாரம் 14 : ஒழுக்கமுடைமை

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

பொருள் : ஒழுக்கத்தினால் எல்லோரும் உயர்வடைவர். ஒழுக்கம் தவறுவதால், தாம் அடையத்தகாத பெரும் பழியை அடைவர்.

### 4, அதிகாரம் 84 : பேதைமை

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

பொருள் : வெட்கப்பட வேண்டிய செயல்களுக்கு வெட்கப்படாமையும் ஆராய வேண்டியவற்றை ஆராய்ந்து பாராமையும் பேணிக்காக்க வேண்டியவற்றை பேணாமையும் அறிவற்றோர் செயல்களாகும்.

### 5, அதிகாரம் 30 : வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

பொருள் : வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

### 6, அதிகாரம் 99 : சான்றாண்மை

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை

பொருள் : நற்குணங்கள் பலவும் நிறைந்தவரின் தன்மைகள் குறைவடையின் பூமியும் தன் பாரத்தையே தாங்க முடியாமல் போய்விடும்.

### 7, அதிகாரம் 17 அழுக்காறாமை

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து

பொருள்: தீய நெறியால் தமக்குக் கேடு வருவதை அறிந்து, அறிவுடையோர் பொறாமை கொண்டு அறமல்லாதவற்றைச் செய்யமாட்டார்.

திருக்குறள் திறன் போட்டி 2026

வள்ளுவர் ஆண்டு - 2057



நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்